<u>பத்திரிக்கை குறிப்பு</u>

புகார்தாரர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை சென்னை-3 பிரிவு அலுவலகத்தை அணுகி, தங்களது நிலத்திற்கு லே-அவுட் வழங்குவதற்கு குன்றத்தூர் நகர பஞ்சாயத்து அலுவலகத்தில் விண்ணப்பித்ததாகவும், விண்ணப்பத்தினை பரிசீலனை செய்து மேல் நடவடிக்கைகாக குன்றத்தூர் நகர பஞ்சாயத்து நிர்வாக அலுவலர் திரு.தனராஜ், தனக்கு ரூ.25,000/- கையூட்டாக கொடுக்க வேண்டும் என்றும் மற்றும் திரு.செல்வராஜ், எழுத்தர் ரூ.10,000/- கையூட்டாக கொடுக்க வேண்டும் என்று கேட்பதாகவும், அதனால் தக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் புகார் அளித்தார். இப்புகாரின் பேரில் வழக்கு பதிவு செய்யப்பட்டு நேற்று 17.11.2021 பொறிவைப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

மேற்படி பொறிவைப்பு நடவடிக்கையின்போது குன்றத்தூர் நகர பஞ்சாயத்து நிர்வாக அலுவலர் திரு.தனராஜ் மற்றும் திரு.செல்வராஜ், எழுத்தர் புகார்தாரரிடமிருந்து ரூ.25,000/- மற்றும் ரூ.10,000/- கையூட்டாக கேட்டு பெற்றபோது திரு.செல்வராஜ் அவர்கள் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை அலுவலர்களால் கைது செய்யப்பட்டார்.

# PRESS NOTE

The complainant approached Vigilance & Anti – Corruption, Chennai-3 detachment, and gave complaint that he had applied for layout plan approval for the plots at Town Panchayat, Kunrathur, for which Tr.Dhanraj, Executive Officer, Town Panchayat, Kunrathur, Chennai District demanded Rs.25,000/- and Tr.Selvaraj, Clerk demanded Rs.10,000/- as bribe for processing his application. In this connection a case was registered and a trap was organized yesterday, 17.11.2021.

During trap proceedings, the accused Tr.Dhanraj, Executive Officer, Town Panchayat, Kunrathur and Tr.Selvaraj, Clerk reiterated their earlier demand and received the bribe amount of Rs.25,000/- and Rs.10,000/- from the complainant. Since A1 Dhanraj was not in the spot, A2 Selvaraj alone arrested.